**செ. கு. எண்:063** **நாள் :08.08.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்களின் அறிக்கை – 8.8.2015

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக போற்றப்படும் பத்திரிகைத் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்புற பணியாற்றியவர் திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் அவர்கள் ஆவார். பாமர மக்களும் செய்திகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் செய்திகளை வெளியிட்டதன் மூலம் பத்திரிகை உலகில் தனக்கென தனி இடத்தை அவர் பெற்றிருந்தார். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியை மீட்டெடுப்பதற்கும் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார். பத்திரிகை உலகில் தனி இடத்தை பெற்றிருந்த திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் சிறப்பு செய்ய வேண்டும் என்பது என் விருப்பம் ஆகும்.

மாலை முரசு நாளிதழின் இயக்குநர் திரு இரா.கண்ணன் ஆதித்தன் அவர்கள் தனது தந்தை திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் வசித்து வந்த அடையாறு காந்தி நகர், 4–ஆவது பிரதான சாலைக்கு, அன்னாரது பெயரை சூட்டிட வேண்டும் என என்னிடம் வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்று அடையாறு காந்தி நகர், 4-ஆவது பிரதான சாலையை “பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை” என பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் சென்னை மாநகர மேயர் அவர்களுக்கு உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில் 3.8.2015 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் நினைவைப் போற்றும் விதமாக, அடையாறு காந்தி நகர், 4-ஆவது பிரதான சாலையை “பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை” என பெயர் மாற்றம் செய்வதற்கான அரசு உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும். புதிதாக பெயர் சூட்டப்பட்ட சாலை பெயர் பலகையை நான் விரைவில் திறந்து வைப்பேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**